## ABSTRACT

Forests – Dharmapuri District – Dharmapuri Taluk – 48, Akkamanahalli Village – Akkamanahalli Forest Block – Survey Numbers 160/2, 178/1 and 178/4 – An extent of 6.71.50 hectare – Declaration under section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification – Approved – Orders – Issued.

---

**Environment, Climate Change and Forests (FR.13) Department**

**G.O.(Ms) No.16**

**Dated: 24.01.2024**
**சோபகிருது, தை–10**
**திருவள்ளுவர்ஆண்டு–2055**
**Read:**

From the Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai-32. Letter No.TS2/21036/2022, Dated 08.05.2023.

=====

**ORDER** :

The proposal received from the Principal Chief Conservator of Forests for notifying of an area of 6.71.50 hectare situated in Survey Numbers 160/2, 178/1 and 178/4, 48, Akkamanahalli Village, Akkamanahalli Forest Block, Dharmapuri Taluk, Dharmapuri District under section 4 of the Tamil Nadu Forest Act, 1882, (Tamil Nadu Act V of 1882) is approved and accordingly the appended Notifications will be published in English in the Tamil Nadu Government Gazette, Dated 14.02.2024 and in Tamil in the Dharmapuri District Gazette, Dated 28.02.2024.

2. The Works Manager, Government Central Press, Chennai-1 is requested to ensure that the Notifications are published in the Tamil Nadu Government Gazette, Dated 14.02.2024. On receipt of Notifications, the Branch Manager, Government Branch Press, Salem is requested to take action to publish them in the Dharmapuri District Gazette.

3. They shall ensure that after publication, printed copies of said Notification in English and Tamil are communicated to the Officers as shown in the Annexure to this order.

..2.

4. The District Collector, Dharmapuri and the Principal Chief Conservator of Forests are requested to watch the publication of the Notifications and bring to the notice of the Government, delay if any, in publication.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
The Works Manager,
Government Central Press,
Chennai – 1.
The Branch Manager,
Government Branch Press, Salem – 636 001.
The Additional Chief Secretary/
Commissioner of Land Administration, Chennai – 5.
The Principal Chief Conservator of Forests
(Head of Forest Force), Chennai – 32.
The District Collector, Dharmapuri.
The Conservator of Forests, Dharmapuri.
The District Forest Officer, Dharmapuri.
The Forest Settlement Officer, Krishnagiri.
Copy to:-
The Revenue and Disaster Management (L.D.4) Department, Chennai – 9.
The Law (E,CC&F-Sty) Department, Chennai – 9.
The Private Secretary to Additional Chief Secretary to Government,
Environment, Climate Change and Forest Department, Chennai-9.
Stock File/Spare Copy.

**//FORWARDED BY ORDER//**

S. Mohamed Yusuf 24/1/2024
SECTION OFFICER
24/01/2024

..3.

**Annexure to G.O.(Ms)No.16**

**Environment, Climate Change and Forest (FR.13) Department,**

**Dated: 24.01.2024**

| Sl. No. | Designation and Address of the Officers | English | Tamil |
|---|---|---|---|
| 1. | The Additional Chief Secretary to Government, Environment, Climate Change and Forest Department, Chennai – 600 009. | 2 | 2 |
| 2. | The Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai – 600 032. | 3 | 3 |
| 3. | The District Collector, Dharmapuri. | 2 | 2 |
| 4. | The Conservator of Forests, Dharmapuri. | 5 | 5 |
| 5. | The District Forest Officer, Dharmapuri. | 12 | 12 |
| 6. | The Forest Settlement Officer, Krishnagiri. | 8 | 8 |

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 24/1/2024
Section Officer
24/01/2024

## APPENDIX.

## NOTIFICATION – I.

In exercise of the powers conferred by section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares that it is proposed to constitute the land within the boundaries specified in the Schedule below as reserved forest and appoints the Special Tahsildar (Forest Settlement), Krishnagiri ex-officio, to be the Forest Settlement Officer to exercise the powers under clause (c) of the said section in respect of that land.

## THE SCHEDULE.

| | | | |
|---|---|---|---|
| 1 | Name of the District | : | Dharmapuri |
| 2. | Name of the Taluk | : | Dharmapuri |
| 3. | Number and Name of the Village | : | 48, Akkamanahalli Village |
| 4. | Survey Number of the Forest Block | : | 160/2, 178/1 and 178/4 |
| 5. | Name of the Forest Block | : | Akkamanahalli Forest Block |
| 6. | Extent of the Forest Block | : | |

| Survey Number | Hectare |
|---|---|
| 160/2 | 2.74.50 Hectare |
| 178/1 | 3.86.00 Hectare |
| 174/4 | 0.11.00 Hectare |
| **Total** | 6.71.50 Hectare |

## BOUNDARIES.

**North**.- The boundary starts from the tri-junction point of Survey Numbers 175, 160/1 and 160/2 of No.48, Akkamanahalli village and generally runs towards east, north, northeast, south and northeast along the southern and eastern boundary of Survey No.160/1, southern boundary of Survey No.161 Western, southern boundary Survey No. 160/5, Southern and eastern boundary of Survey No.160/6, southeast boundary of Survey No.163 and reaches the junction point of Survey Numbers 160/2, 163, 159 of No.48, Akkamanahalli village and Mookkanur Reserved Forest.

**East and South**.- Thence the boundary generally runs towards south along the western boundary of Mookkanur Reserved Forest and reaches the junction point of Survey Numbers 244, 178/3 and 178/1 of No.48, Akkamanahalli village and Mookkanur Reserved Forest.

**West**.- Thence, the boundary generally runs towards North, northeast, north, east, north, northwest, west, north, east, north, southeast, northeast, northwest and north along the eastern side of Survey Numbers 178/3, 178/2, 178/3, southern and eastern boundary of Survey No.178/5, southern, eastern, northern and western boundary of Survey No.160/3, southern and eastern boundary of Survey No.176, southern, eastern and northeast boundary of Survey No.160/9 and eastern boundary of Survey No.175 of No.48, Akkamanahalli village and reaches the starting point.

**NOTIFICATION – II.**

In exercise of the powers conferred by the last paragraph of section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the District Forest Officer, Dharmapuri Division, Dharmapuri ex-Officio, to attend on behalf of the Government at the inquiry prescribed under Chapter-II of the said Act, in respect of the land of Akkamanahalli Forest Block proposed to be constituted as reserved forest.

**NOTIFICATION – III.**

In exercise of the powers conferred by the section 14 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the Personal Assistant (General) to the Collector of Dharmapuri District, ex-Officio, to hear appeals, if any, against the orders passed under sections 11, 12 and 13 of the said Act, in respect of the land of Akkamanahalli Forest Block proposed to be constituted as reserved forest.

**SUPRIYA SAHU**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 24/1/2024
Section Officer
24/01/2024

## சுருக்கம்

வனம் – தருமபுரி மாவட்டம் – தருமபுரி வட்டம் – 48, அக்கமனஅள்ளி கிராமம் – அக்கமனஅள்ளி வன வட்டாரம் – நில அளவை எண்கள் 160/2, 178/1 மற்றும் 178/4-ல் உள்ள 6.71.50 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச் சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 4-ன் கீழ் அறிவிக்கை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை**

அரசாணை (நிலை) எண்.16

நாள்: 24.01.2024
சோபகிருது, தை-10
திருவள்ளுவர் ஆண்டு-2055

**படிக்க:**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-32. கடித எண்.டிஎஸ்2/21036/2022, நாள். 08.05.2023.

=======

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், 48, அக்கமனஅள்ளி கிராமம், அக்கமனஅள்ளி வன வட்டாரம், நில அளவை எண்கள் 160/2, 178/1 மற்றும் 178/4-ல் உள்ள 6.71.50 எக்டர் நிலத்தினை தமிழ்நாடு வனச் சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 4-ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 14.02.2024-ல் ஆங்கிலத்திலும், தருமபுரி மாவட்டம் அரசிதழ் நாள் 28.02.2024-ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 14.02.2024-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் தருமபுரி மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு சேலம் அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய மற்றும் கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

..2.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை தருமபுரி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹூ

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், சேலம் – 636 001.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர், நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், தருமபுரி.
வனப்பாதுகாவலர், தருமபுரி.
மாவட்ட வன அலுவலர், தருமபுரி.
வன நிர்ணய அலுவலர், கிருஷ்ணகிரி.

<u>நகல்:-</u>

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை, சென்னை-9.
சட்டத் (E,CC&F-Sty) துறை, சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/1/2024

பிரிவு அலுவலர்

24/01/2024

**அரசு ஆணை (நிலை) எண்.16**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 24.01.2024–ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை –9. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–32. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், தருமபுரி. | 2 | 2 |
| 4. | வனப்பாதுகாவலர், தருமபுரி. | 5 | 5 |
| 5. | மாவட்ட வன அலுவலர், தருமபுரி. | 12 | 12 |
| 6. | வன நிர்ணய அலுவலர், கிருஷ்ணகிரி. | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

[signature] 24/1/2024.
**பிரிவு அலுவலர்**
24/01/2024

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை – I.**

1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே உள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்களுக்குட்பட்ட நிலப்பகுதியை "காப்பு வனமாக" அமைக்கக் கருதியிருப்பதாக இதனால் அறிவிப்பதுடன் அந்த நிலப் பகுதியைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன பிரிவின் (c) பகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்த கிருஷ்ணகிரி வட்டாட்சியரை (வன நிருணயம்) அலுவலால், வன நிருணய அலுவலராக இதனால் நியமிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | தருமபுரி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | தருமபுரி |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 48, அக்கமனஅள்ளி கிராமம் |
| 4. | வன வட்டாரத்தின் நில அளவை எண்கள் | : | 160/2, 178/1 மற்றும் 178/4 |
| 5. | வன வட்டாரத்தின் பெயர் | : | அக்கமனஅள்ளி வன வட்டாரம் |
| 6. | வன வட்டாரத்தின் மொத்தப் பரப்பளவு | : | |

| **நில அளவை எண்கள்** | **எக்டேர்** |
|---|---|
| 160/2 | 2.74.50 எக்டர் |
| 178/1 | 3.86.00 எக்டேர் |
| 178/4 | 0.11.00 எக்டேர் |
| **மொத்தம்** | 6.71.50 எக்டேர் |

**நாற்புற எல்லைகள்.**

**வடக்கு.–** இவ்வெல்லையானது எண்.48, அக்கமனஅள்ளி கிராம நில அளவை எண்கள் 175, 160/1 மற்றும் 160/2 ஆகியவற்றின் முச்சந்திப்பில் தொடங்கி எண்.48, அக்கமனஅள்ளி கிராம நில அளவை எண்.160/1–ன் தெற்கு மற்றும் கிழக்கு எல்லை வழியாகவும், நில அளவை எண். 161–ன் தெற்கு எல்லை வழியாகவும், நில அளவை எண்.160/5–ன் மேற்கு மற்றும் தெற்கு எல்லை வழியாகவும், நில அளவை எண்.160/6–ன் தெற்கு மற்றும் கிழக்கு எல்லை வழியாகவும், நில அளவை எண்.163–ன் தென்கிழக்கு எல்லை வழியாகவும் பொதுவாக கிழக்கு, வடக்கு, வடகிழக்கு, தெற்கு மற்றும் வடகிழக்கு நோக்கிச் சென்று எண்.48, அக்கமனஅள்ளி கிராம நில அளவை எண்கள் 160/2, 163, 159 மற்றும் மூக்கனூர் காப்புவனம் ஆகியவை சந்திக்கும் சந்திப்பை அடைகிறது.

**<u>கிழக்கு மற்றும் தெற்கு</u>.–** பின்னர் இவ்வெல்லையானது மூக்கனூர் காப்பு வனத்தின் மேற்கு எல்லை வழியாக பொதுவாக தெற்கு நோக்கிச் சென்று எண்.48, அக்கமனஅள்ளி கிராம நில அளவை எண்.244, 178/3 மற்றும் 178/1 ஆகியவை சந்திக்கும் சந்திப்புப் புள்ளியை அடைகிறது.

**<u>மேற்கு</u>.–** பின்னர் இவ்வெல்லையானது, எண்.48, அக்கமனஅள்ளி கிராம நில அளவை எண்கள் 178/3, 178/2, 178/3 ஆகியவற்றின் கிழக்குப் பக்கமாகவும், நில அளவை எண். 178/5–ன் தெற்கு மற்றும் கிழக்கு எல்லை வழியாகவும், நில அளவை எண். 160/3–ன் தெற்கு, கிழக்கு, வடக்கு மற்றும் மேற்கு எல்லை வழியாகவும் நில அளவை எண்.176–ன் தெற்கு மற்றும் கிழக்கு எல்லை வழியாகவும், நில அளவை எண். 160/9–ன் தெற்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு எல்லை வழியாகவும் பொதுவாக வடக்கு, வடகிழக்கு, வடக்கு, கிழக்கு, வடக்கு, வடமேற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு, வடக்கு, தென்கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கு மற்றும் வடக்கு நோக்கிச் சென்று தொடக்கப்புள்ளியை அடைகிறது.

## <u>அறிவிக்கை–II</u>.

1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4–ஆம் பிரிவின் இறுதிப் பத்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்க கருதப்பட்டுள்ள அக்கமனஅள்ளி வனவட்டாரத்தின் நிலப்பகுதியைப் பொறுத்த வரையில், மேற்சொன்ன சட்டத்தின் 2–ஆம் அத்தியாயத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள விசாரணைக்கு அரசு சார்பில் கலந்து கொள்ள தருமபுரி கோட்ட, மாவட்ட வன அலுவலரை அலுவலால் இதனால் நியமிக்கிறார்.

## <u>அறிவிக்கை–III.</u>

1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 14–ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்கக் கருதப்பட்டுள்ள அக்கமனஅள்ளி வனவட்டாரத்தின் நிலப்பகுதியைப் பொறுத்தவரையில், மேற்சொன்னசட்டத்தின் 11, 12 மற்றும் 13–ஆம் பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கெதிராக மேல்முறையீடுகள் ஏதும் செய்யப்படுமாயின், அவற்றை விசாரணை செய்ய தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (பொது) அலுவலால் இதனால் நியமிக்கிறார்.

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

தி. [signature] 24/1/2024.
பிரிவு அலுவலர்
24/01/2024